NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 29 April 2015

# லீ கோங் சியன் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் திறப்பு

தென் கிழக்கு ஆசியாவின் உயிரினங்களை உயிரோட்டத்துடன் காட்டும் குடியரசின் ஒரே லீ கோங் சியன் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் நேற்று பொது மக்களுக்கு திறந்துவிடப்பட்டது.

பிற்பகல் 2.30 மணி காட்சிக்கு நுழைவுச் சீட்டு வாங்கியவர்கள் நட்சத்திரமாகத் திகழ்ந்த மூன்று டைனசார் பிரின்ஸ், அபோலோனியா, டிவிங்கி ஆகியவற்றை கண்டு பிரமித்தனர். ராட்சச நண்டு முதல் பறவை இனங்கள் வரை சுமார் 2,000 உயிரினங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன.

இந்த அருங்காட்சியகம் காலை 10.00 மணிக்கு திறக்கப்படுகிறது. ஆறு ஒன்றரை மணி நேரத்துக்கான நுழைவுச் சீட்டுகள் விற்கப்படுகின்றன.

நுழைவுச் சீட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று அருங்காட்சியகத்தின் துணைத் தலைவர் ருடோல்ஃப் மெய்ரர் வலியுறுத்தினார்.

இதற்கிடையே, அருங்காட்சியகத்தை பார்வையிட்ட ஓய்வுபெற்ற கட்டுமான மேற்பார்வையாளர் டான் கீ குவாங், 68, "மறக்க முடியாத அளவுக்கு அருங்காட்சியம் இருந்தது, குறிப்பாக டைனசார்கள் என்னைக் கவர்ந்தன. முதல் நாள் அன்று இங்கு வந்தது மகிழ்ச்சியாக இருக்கிறது," என்றார் திரு டான்.

அவருக்கும் அவரது மனைவிக்கும் மகள் நுழைவுச் சீட்டுகளை வாங்கியிருந்தார்.



சிங்கப்பூரின் புதிய அருங்காட்சியகம். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.